**STC 484/2020**

***PW1 -சிவப்பிரகாசம்*** ***நாள் 24.05.2024.***

***எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி***

1. 2019ம் ஆண்டில் எனக்கு எத்தனை வங்கிகளில் கணக்கு இருந்தது என்றால் - ஒரே ஒரு வங்கி. கோட்டூர் சிட்டி யூனியன் வங்கியில் மட்டும் தான் சேமிப்பு கணக்கு இருந்தது. கோட்டூர் சிட்டி யூனியன் வங்கி சேமிப்பு கணக்கில் 2019ம் ஆண்டில் அதிகபட்ச இருப்பு வைத்திருந்தேன் என்றால் - ரூ.2,00,000/-க்கு மேல் சேமிப்பில் வைத்திருந்தேன். அதிகபட்ச பரிவர்த்தனை எவ்வளவு என்றால் - குறிப்பிட்டு என்னால் சொல்ல இயலாது.

2. வழக்கில் சொல்லப்பட்டுள்ள தொகையான ரூ.5,00,000/-த்தை எங்கு வைத்து எதிரியிடம் கொடுத்தேன் என்பதையோ அல்லது யார் முன்னிலையில் கொடுத்தேன் என்பதையோ எனது அறிவிப்பிலோ ஆணையுறுதி ஆவணத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான்.

3. 24.09.2019ம் ஆண்டு காலக்கட்டத்தில் எதிரியான தாமரைச்செல்வன் எங்கு பணிபுரிந்தார் என்றும் அவரது பணி என்ன என்பது பற்றியும் அவரது நிலை என்ன என்பது பற்றியும் என்னால் சொல்ல முடியுமா என்றால் - CRC போக்குவரத்து கழகத்தில் அரசு பணியில் திருத்துறைப்பூண்டியில் இருந்தார். அவரது நிலை என்ன என்பது எனக்கு தெரியுமா என்றால் - தெரியாது.

4. சம்பவ காலக்கட்டத்தில் எதிரி எவ்வளவு சம்பளம் பெற்று வந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் - தெரியாது. 2019 சம்பவ காலக்கட்டத்தில் எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் எத்தனை நபர்கள் என்றும் அவரது பிள்ளைகள் என்ன செய்துக்கொண்டிருந்தார்கள் என்பது எனக்கு தெரியுமாள ன்றால் - தெரியாது.

5. எனது ஊர் கோட்டூர் என்றும் எதிரியின் ஊர் கட்டிமேடு என்றால் - சரிதான். கோட்டூருக்கும் கட்டிமேட்டுக்கும் இடையில் எவ்வளவு தொலைவு என்றால் - சுமார் 23 கி.மீ இருக்கும்.

6. எனது செல்போன் எண். 9751800103 ஆகும். Vodafone நிறுவனத்தினை சார்ந்தது. சம்பவ காலத்தில் எதிரி என்னவிதமான செல்போன் மற்றும் எண் உபயோகித்தார் என்றால் - எனக்கு ஞாபகத்தில் இல்லை.

7. கோட்டூர் கணேசன் என்பவர் எனது நம்பருக்கு அடிக்கடி தொடர்பு கொள்வார் என்றால் - சரிதான். வர்த்தக சங்கத்தில் தலைவராக இருப்பதால் என்னை தொடர்பு கொள்வார். இன்றைக்கு அல்லது நேற்றைய தினங்களில் கணேசன் எனக்கு தொடர்பு கொண்டாரா என்றால் - இல்லை. நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன், கையொப்பம் தமிழில் தான் போடுவேன் என்றால் - சரிதான். ஆங்கிலம் எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் - சரிதான்.

8. இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள ரூ.5,00,000/- வட்டிக்காக கொடுக்கப்பட்டதா என்றால் - இல்லை. வட்டிக்காக கொடுக்கப்பட்டதாக எனது புகாரிலோ அறிவிப்பிலோ சொல்லப்படவில்லை என்றால் - சரிதான்.

9. நீதிமன்றத்தில் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆன செக்கில் புகார்தாரர் பெயர் சிவப்பிரகாசம் என்றும் தொகை Five Lakhs only என்றும் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். எண்ணால் ரூ.5,00,000/- என்றும் தேதியும்

எண்ணால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். கலெக்‌ஷன் போடப்பட்டுள்ள Withdraw பார்மிலும் எழுதப்பட்டுள்ள கையெழுத்தும் செக்கில் உள்ள எழுத்துகளும் ஒரே கையெழுத்துக்கள் தான் என்றால் - இல்லை. மேற்படி இரண்டு எழுத்துகளும் ஒரே நபரால் பூர்த்தி செய்து எழுதப்பட்டவை தான் என்றும் தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - இல்லை. மேற்படி ம.சா.ஆ.1 மற்றும் 2ல் உள்ள கையெழுத்துக்களை ஒப்பிட்டு பார்க்க கையெழுத்து நிபுணருக்கு அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபணையும் இல்லை என்றால் - சரிதான்.

10. மேற்படி இரண்டு ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் கோட்டூர் கணேசன் மூலமாகவும் என் மூலமாகவும் நிரப்பப்பட்டது என்றும் தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

11. என்னிடம் எந்த தருணத்திலும் எதிரி ரூ.5,00,000/-த்தை கடனாக பெறவில்லை என்றும் எதிரி எந்த தருணத்திலும் என் வசம் வழக்கு காசோலையை அளிக்கவில்லை என்று சொன்னால் - சரியல்ல.

12. ஆண்டு ஒன்றுக்கு ரூ.5,00,000/-க்கு மேல் வருமானம் ஈட்ட முடியாத நான் ரூ.5,00,000/-த்தை கடனாக கொடுத்ததாக சொல்லும் சங்கதி ஏற்புடையது அல்ல என்றால் - சரியல்ல. நான் கோட்டூர் கணேசனுடன் சேர்ந்துக்கொண்டு எதிரியின் காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல.

13. எந்த தருணத்திலும் எதிரி சட்டபூர்வ கடனுக்காக இந்த வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றால் - சரியல்ல. ம.சா.ஆ.2னை யார் பூர்த்தி செய்தது என்றால் - வங்கியில் வேலை பார்ப்பவர். மேற்படி சங்கதி தற்போது என்னால் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் - சரியல்ல.